நாள் 10.05.2024

CC 97/2018

அசா 1

பெயர் : பிருந்தா

த/பெ.பழனிச்சாமி

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் செஞ்சேரிபுதூரில் என் அம்மா, அப்பா மற்றும் தம்பியுடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கல்லூரி இளங்கலை படிப்பில் 2 ம் வருடம் வரை படித்துள்ளேன். எனது புகாரில் நானும் எதிரியும் 1 வருடம் காதலித்து வந்தோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் ஒரு அறையும் மேலும் ஒரு சமையலறையும் மட்டுமே உள்ளன என்றால் சரிதான்.

2. சம்பவ காலத்தில் என் பாட்டி எங்கள் வீட்டில் இல்லை. எனது புகாரில் தேதி, நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னுடன் உறவு வைத்துககொண்டதை நான் எனது தோழிகள் மற்றும் அம்மா யாரிடமும் முதல்முறை கூறவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முந்திய தாம்பத்ய உறவின் பின் விளைவுகள் என்ன என்பது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

3. நானும் எதிரியும் பலமுறை நெருக்கமாக இருந்தாக எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நானும் எதிரியும் காதலித்த விபரம் என் தோழிகள் யாருக்கும் மற்றும் அருகில் இருந்த வீட்டில் வசித்தவர்களுக்கும் தெரியாது. எங்கள் ஊரில் மொத்தம் 500 குடும்பங்கள் மட்டுமே உள்ளன என்றால் சரிதான். நான் வாந்தி எடுத்தால்தான் சம்பவங்கள் குறித்து என் தாயாருக்கு தெரியவந்தது என்று என் புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. எதிரி என்னை திருமணம் செய்தகொள்ளாததால்தான நான நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் விசாரணையில் நடந்த சம்பவங்களை நான் கூறினேன். புகாரில் சொல்லாத சங்கதிகளையும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. காவல் ஆய்வாளர் விசாரணையிலும் எதிரி என்னை திருமணம் செய்து கொள்ள மறுத்தால்தான் புகார் கொடுப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு எதிரி மீது தாக்கல் செய்து அது

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கை 6 மாதங்களுக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்டு மேற்படி வழக்கை தாக்கல் செய்ததாக எனது வழக்கறிஞர் கூறினார். மேற்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் சங்கதிகளை படித்து பார்த்து புரிந்துகொண்டுதான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான்.

6. புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.